**பலங்கொட நகர சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 மார்ச் 03 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை 2020 ஜுலை 23 திகதியும், விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஆகஸ்ட் 13 ஆம் திகதியும் தவிசாளரிற்கு அனுப்பப்பட்டன.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின்முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைபிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2019 திசெம்பர் 31 இல் பலங்கொட நகர சபையின் நிதிநிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான 20 காணிகளின் பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சபைக்கு சொந்தமான காணிகளை மதிப்பிட்டு கணக்கீடு செய்ய வேண்டும். | ஆதன முகாமைத்துவ வேலைத் திட்டத்திற்காக (AMS) அனைத்து நிலையான சொத்துக்களையும் உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும், அதற்குரிய மதிப்பீட்டறிக்கை கிடைத்வுடன் அவற்றை நிதிக்கூற்றுக்களில் சீராக்க உள்ளதாகவும் அறிவிக்கிறேன். |
| (ஆ) | மீளாய்வாண்டில் நிலையான சொத்துக் கொள்வனவிற்காக செலவிடப்பட்ட ரூபா 735,086 மீண்டுவரும் செலவின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஆண்டிற்குரிய செலவுகளை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். | 2020 ஆண்டு நிதிக்கூற்று மூலம் சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (இ) | தேசிய கடன் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெற்றிருந்த ரூபா 111,209,828 கடன் தொகை மறுசீரமைப்பில் போது பதிவழிக்கப்பட்டிருந்த ரூபா 54,128,411 ஆன வட்டி கடன் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | கடன் கணக்கின் மீதியை சரி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 ஆண்டு நிதிக்கூற்று மூலம் சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஈ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று செலுத்த வேண்டிய 19 மீதிகளின் பெறுமதியான | ஆண்டுக்குரிய அனைத்து பொறுப்புக்களும் | 2020 ஆண்டு நிதிக்கூற்று மூலம் சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 132,058 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் உட்படுத்தப்பட வேண்டும். | |
| (உ) | கடந்த ஆண்டுக்குரிய ரூபா 255,323 மீண்டுவரும் செலவுகள் மீளாய்வாண்டின் செலவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கடந்த ஆண்டுக்குரிய செலவுகள் சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகளை தவிர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஊ) | மீளாய்வாண்டு வேலை கடன்கொடுனர் ரூபா 1,152,218 மிகையாக குறிப்பிடப்பட்டிருந்தது. | ஆண்டுக்குரிய பொறுப்பினை சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்ய வேண்டும். | 2020 ஆண்டில் சரி செய்வதாக அறிவிக்கிறேன். |
| (எ) | மீளாய்வாண்டிற்குரிய மூலதன செலவுகள் ரூபா 130,899 குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஆண்டுக்குரிய செலவுகளை சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்ய வேண்டும். | 2020 ஆண்டு நிதிக்கூற்று மூலம் சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஏ) | 2020 ஜனவரி நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 7,000,000 மீளாய்வாண்டு முதலீடாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஆண்டுக்குரிய கொடுக்கல் வாங்கல்களை சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்ய வேண்டும். | 2020 ஆண்டு நிதிக்கூற்று மூலம் சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஒ) | மீளாய்வாண்டினுள் கொள்வனவு செய்யப்பட்ட கூட்டுத் தொகை ரூபா 1,415,086 ஆன இயந்திர உபகரணங்கள் மற்றும் தளபாடங்களும் பொருத்துக்களும் மூலதனமாக்கப்பட்டு இருக்கவில்லை. | ஆண்டினுள் கொள்வனவு செய்யப்பட்ட அனைத்து நிலையான சொத்துக்களும் மூலதனமாக்கப்பட வேண்டும். | 2020 ஆண்டு நிதிக்கூற்று மூலம் சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஓ) | 10 வருடங்களிற்கு முன்னரிலிருந்து முன்கொண்டு வரப்படும் ரூபா 596,080 மற்றும் மீளாய்வாண்டிற்குரிய ரூபா 86,270 ஆன மறுக்கப்பட்ட காசோலைகளை தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மறுக்கப்பட்ட காசோலைகளை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | மீளாய்வாண்டிற்குரிய மீதியை தீர்க்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

## 1.4 இணங்காமை

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும்முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்ப்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| நகர சபை அதிகார சட்டத்தின் 154(i) மற்றும் 157(6)(எ) பிரிவு | பலங்கொட நகர எல்லையில் விளப்பர அறிவித்தலை ஒழுங்கமைத்தல், நிர்வகித்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் விளம்பரப் பலகை கட்டணம் அறவிட 2018 ஆண்டு தயாரித்திருந்த உப விதியை அங்கீகரித்துக் கொள்ள 2019 திசெம்பர் 31 வரையும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உப விதியை அங்கீகரித்து வருமானம் ஈட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். | இவ் விளப்பர அறிவித்தல் உப விதி தொடர்நதும் திருத்தப்பட்டதனால் சில தாமதங்கள் ஏற்பட்டதாகவும், இறுதி திருத்த வரைபை மீண்டும் அங்கீகாரத்திற்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டிருப்பதாகவும் அறிவிக்கிறேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் வருமானத்தை விஞ்சிய செலவு ரூபா 1,604,413 ஆனதுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 4,743,028 ஆனது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | வருமான மூலம் | 2019 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2019 பில் போடப்பட்ட வருமானம் | 2019 சேர்க்கப்பட்ட வருமானம் | 2019 திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம | 2018 பில் போடப்பட்ட வருமானம | 2018 சேர்க்கப்பட்ட வருமானம | 2018 திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரி மற்றும் குத்தகை | 8,745,000 | 8,149,957 | 7,356,497 | 3,021,434 | 8,590,000 | 8,991,122 | 7,993,892 | 4,012,406 |
| (ii) | வாடகை | 31,225,000 | 31,332,843 | 30,942,713 | 1,032,891 | 24,360,000 | 28,088,669 | 28,144,527 | 804,356 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 4,710,000 | 4,406,843 | 4,378,290 | - | 4,000,000 | 3,804,125 | 3,804,125 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 42,950,000 | 30,774,124 | 64,446,547 | 12,979,122 | 28,310,000 | 24,356,748 | 23,745,450 | 160,164 |
| | | 87,630,000 | 74,663,767 | 107,124,047 | 17,033,447 | 65,260,000 | 65,240,664 | 63,687,994 | 4,976,926 |

### 2.2.2 வீதவரி மற்றும் வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கடந்த ஆண்டுகளிற்குரிய நிலுவை வீதவரி கட்டணம் ரூபா 2,277,995 யை அறவிட தேவையான நடவடிக்கை எடுததிருக்காததுடன் நிலுவை வீதவரி கட்டணம் தொடர்பாக காலப்பகுப்பாய்வொன்றும் தயாரித்திருக்கவில்லை. | நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை வீத வரியை அறவிட விஷேட நடமாடும் வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தியதாகவும், தற்போது நடைமுறையல் உள்ள கனணி நிகழ்சித் திட்டத்தினூடாக காலப்பகுப்பாய்வு அறிக்கையை பெறும் வசதி இல்லை எனவும் அறிவிக்கிறேன். |

### 2.2.3 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கடந்த ஆண்டிற்காக நிலுவையாக காணப்பட்ட வாடகை மற்றும் கட்டணம் ரூபா 354,444 அறவிடப்பட்டு இருக்கவில்லை. | நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும் | பேரூந்து தரிப்பிட கடையறைகளிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 105,300 யை அறவிட தற்போது நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன், எஞ்சிய நிலுவையை எதிர்காலத்தில் அறவிட நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

### 2.2.4 நீதிமன்ற தண்டபணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2014 ஜனவரி முதல் 2019 ஜுன் வரை பெற வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 20,609,670 இனை மாகாண சபை பிரதான செயலாளரிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சபைக்கு பெற வேண்டிய வருமானங்களை தாமதமின்றி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | இக் காலப்பகுதிக்கான முத்திரைக் கட்டணத்தை பெற்றுக் கொள்வதற்குரிய அட்டவணை தற்போது மாகாண சபைக்கு அனுப்பப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

நகர சபை அதிகார சட்டத்தின் 04 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும்,மக்கள் நலன், இலகுமற்றும் நலன்புரிச் சேவைகள் போன்ற சபையினால் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

#### கழிவுப் பொருள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீள்சுழற்சிக்குட்படுத்த முடியாத கழிவுப் பொருட்கள் மாதத்திற்கு 504 டொன்கள் ஒன்று சேர்வதுடன் சரிவு ஏற்பட்ட குப்பை மலைக்கருகில் குவிக்கப்பட்டிருந்த மெட்ரிக் டொன் 1057 அளவான மீள்சுழற்சிக்குட்படுத்த முடியாத கழிவுப் பொருட்களை சுற்றாடலிற்கு நன்மை பயக்கும் வகையில் வெளியிட செயன்முறை ஒன்று தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை | மீள்சுழற்சிக்குட்படுத்த முடியாத கழிவுப் பொருட்களை வெளியிட முறையான செயன்முறை ஒன்றை இனங்கண்டு செயற்படுத்த வேண்டும். | இக் குப்பை குவியலை பாதிப்பற்ற வகையில் வெளியிட அல்லது வேறு பொருத்தமான முறைமை ஒன்றிற்கான ஆலோசனை பெற்றுக் கொள்ள மகா சபையிற்கு முன்வைக்கவும் சபையிடமிருந்து கிடைக்கும் தீர்மானத்தின் படி இக் குப்பை குவியலை அகற்ற நடவடிக்கை எடுக்கவும் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கடந்த ஆண்டுகளிற்குரிய கூட்டுத் தொகை ரூபா 807,973 ஆன உள்ளூராட்சி ஓய்வூதிய பங்களிப்பு தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | ஓய்வூதிய பங்களிப்பை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | மரணித்த ஊழியர்களிற்குரிய பங்களிப்புத் தொகையை அகற்றி எஞ்சிய மீதியை ஓய்வூதிய திணைக்களத்திற்கு செலுத்த தேவையான நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கிறேன். |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | **ஊழியர் பற்றாக்குறை** | | |
| (i) | செயலாளர் பதவி 2001 ஜுலை முதல் வெற்றிடமாகவுள்ளதுடன் அரச முகாமை உதவியாளர் சேவையின் சிறப்புத் தர உத்தியோகத்தர் ஒருவர் 2016 செப்டம்பர் முதல் செயலாளர் பதவியில் பதில் கடமைக்காக நியமிக்கப்பட்டிருந்தார். | முக்கிய பதவி வெற்றிடங்களை நிரப்பிக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | இது தொடர்பாக உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்திற்கு காலாண்டு அடிப்படையில் அறிவூட்டியுள்ளதாக அறிவிக்கிறேன். |
| (ii) | பொது சுகாதார பரிசோதகர் பதவி ஒன்று, 02 நூலக அதிபர் பதவிகள், அரச முகாமை உதவியாளர் பதவி ஒன்று, வருமான பரிசோதகர் பதவி ஒன்று, 02 முன்பள்ளி ஆசிரியர் பதவிகள், 02 சாரதி பதவிகள் மற்றும் மருந்தக கலவையாளர் பதவியில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதவி வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். | இவ் வெற்றிடங்கள் தொடர்பாக அடிக்கடி நியமன உத்தியோகத்தர் அறிவூட்டப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். |
| **(ஆ)** | **ஊழியர் கடன்** | | |
| | 2018 ஆண்டு சேவையை விட்டுச் சென்ற ஊழியர் ஒருவரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 104,517 ஊழியர் கடனை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஊழியர் கடன் மீதியை தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | இக் கடனை அறவிட சட்ட நடவடிக்கை எடுத்திருப்பதாக அறிவிக்கிறேன். |

## 3.4 செயற்பாட்டு செயற்திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பலங்கொட நகர சபை மற்றும் பலங்கொட பிரதேச சபை எல்லையில் உள்ள 119 குடும்பங்கள் தொடர்பாக எல்லை நிர்னயம் செய்யப்படாததால் அந்த 119 வீதவரி அலகுகளிற்குரிய ரூபா 191,289 ஆன வீதவரி அறவிட முடியாத நிலை ஏற்பட்டிருந்தது. | எல்லை நிர்னயம் தொடர்பான பிரச்சினையை தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | எல்லை நிர்னயம் தொடர்பான முன் நடவடிக்கைகளிற்காக கள பரிசோதனையொன்றை மேற்கொண்டு அறிக்கை ஒன்றை வழங்க தேவையான நடவடிக்கைகளுக்காக வருமான பரிசோதகரிற்கு அனுப்பப்பட்டுள்ளது. |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**சொத்துக்கள் பதியப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| கூட்டுப் பெறுமதி ரூபா 451,950,444 ஆன நிலையான சொத்துகளிற்கான நிலையான சொத்து பதிவேடு மற்றும் விரிவான அட்டவணையும் பெறுமதி ரூபா 14,721,402 ஆன சில கையிருப்புக்கள் மற்றும் சாசு மாற்றல் கணக்கிற்கான விரிவான அடடவணையும் நாளாதுவரையாக்கப்பட்டு இருக்கவில்லை. | சொத்துக்கள் பதிவேடு மற்றும் விரிவான அடடவணைகள் நாளாதுவரையாக பேணப்பட வேண்டும். | சபைக்கு சொந்தமான காணி மற்றும் கட்டிடங்களை மதிப்பிட மதிப்பீட்டு திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், அவை மதிப்பிடப்பட்ட பின்னர் சொத்துக்கள் முகாமைதுவ வேலைத் திட்டத்திற்கு உட்படுத்துவதாகவும் அறிவிக்கிறேன். |

**3.6 பெறுகைகள்**

**ஒப்பந்த நிர்வாகம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ஒப்பந்த பெறுமதி ரூபா 478,000 ஆன பேரூந்து தரிப்பிட சிவிலிம் நிர்மாணம் தொடர்பாக முறையாக விலை மணு பத்திரங்களை விநியோகிக்க நடவடிக்கை எடுக்காததால் முன்வைக்கப்பட்ட விலை மணு பின்னர் மீண்டும் திருத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. அதன் காரணமாக அனைத்து மணுதாரர்களையும் மதிப்பிட்டு மிகஇணக்கமான பதில் வழங்கிய மணுதாரரை தெரிவு செய்யவதற்கு காணப்பட்ட சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது. | பெறுகைகள் செயற்பாட்டை முறையாக திட்டமிட்டு நடைமுறைப்படுத்த வேண்டும். | விலை மணு கோருவதற்காக மதிப்பீடு தயாரிக்கையில் மதிப்பீட்டு இலக்கம் 01 முதல் 09 வரை மாத்திரம் ஆரம்பத்தில் தயாரித்ததாகவும், பின்னர் உருப்படி 10 முதல் 20 வரை திருத்தத்துடன் மீணடும் சமர்பித்ததாகவும், பூரண மதிப்பீட்டு விலை மணு கோரிய போட்டிதாரர்களிற்கு அனுப்பப்பட்டதால் மணுதாரர்களுக்கு பாதகமொன்று ஏற்படவில்லை என அறிவிக்கிறேன். |

**4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**தீர்க்கப்படாத அவதானங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | சபைக்கு சொந்தமான பலங்கொட விடுதியில், விற்பனைக்காக 2016 மே 21 வெசக் பௌரணமி போயா தினத்தில் மதுபானம் மில்லி லீட்டர் 163,110 அனுமதிப்பத்திர நிபந்தனைகளுக்கு முரணாக வைத்துக் கொள்ள இரத்தினபுரி உதவி மதுவரி ஆணையாளரினால் 2016 ஆகஸ்ட் 08 | குறிப்பிடப்பட்ட அனைத்து குற்றங்களையும் வழக்கின் குற்றங்களாக தாக்கல் செய்து செலுத்தப்பட்ட பணத்தை அறவிட | போயா தினத்தில் மதுபானம் விற்பனை செய்ததால் இதன் அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்வதாக மதுவரி திணைக்களம் அறிவித்திருந்தன் காரணத்தால் ஒப்பந்த |

| | | | |
|---|---|---|---|
| | திகதி தீர்மானிக்கப்பட்டு ரூபா 1,515,000 ஆன தண்டப்பணத்தை பொறுப்புதாரரிடம் அறவிடும் அடிப்படையில் சபையினால் செலுத்தப்பட்டிருந்தது. தண்டப்பணத்தை பொறுப்புதார தரப்பினரிடமிருந்து அறவிட மூன்று பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்திருந்த போதும் உதவி மதுவரி ஆணையாளரின் குற்றப் பத்திரத்தில் குறிப்பிடப்படும் வெசக் பௌரணமி போயா தினத்தில் மதுபானம் விற்பனை செய்தல் எனும் குற்றமும் உள்ளடங்களாக ஏனைய குற்றங்கள் வழக்கின் குற்றங்களாக உள்ளடக்க சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்க வேண்டும். | அடிப்படையில் நியமிக்கப்பட்ட ஊழியர்களிற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்து அறவிடும் அடிப்படையில் மாகாண சபை பிரதான செயலாளரின் அங்கீகாரத்தின் மீது சபை நிதியத்தால் இத் தண்டப்பணத்தை 09 தவணைகளில் செலுத்தியதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | கடந்த ஆண்டுகளில் இருந்து முன்கொண்டுவரப்படும் ரூபா 9,303,601 ஆன காசு மாற்றல் கணக்கின் மீதி தீர்க்கப்பட்டு இருக்கவில்லை. | காசு மாற்றல் கணக்கின் மீதியை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் தீர்க்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (இ) | விடுதிக் கட்டணம் மற்றும் 98 விடுதி கடன்படுனர்களிடமிருந்து 07 வருடங்களை விஞ்சிய காலமாக அறவிட வேண்டிய ரூபா 953,745 வை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வருமானம் மற்றும் கடன்படுனர் மீதிகளை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | வைப்புக் கணக்கிலுள்ள சேவைக் கட்டணத்தில் இருந்து கடன்படுனர் மீதியை அறவிட நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் விடுதி கட்டணத்தை காணப்படும் நிலுவை மீதியிலிருந்தும் விரைவாக தீர்க்க எதிர்பார்ப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஈ) | ரூபா 10,100 ஆன மாதாந்த வாடகைக்கு குத்தகை வழங்கப்பட்ட 02 கடையறைகள் ரூபா 35,000 இற்கு உப குத்தகை வழங்கப்பட்டிருந்தன. அதற்கு மேலதிகமாக மக்கள் சந்தையில் கடையறைகளை குத்தகை வழங்கல் தொடர்பான உடன்படிக்கையிற்கு எதிராக 07 கடையறைகள் உப குத்தகை வழங்கப்பட்டிருந்த போதும் அது தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குத்தகை உடன்படிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இது தொடர்பாக கணிப்பீடொன்றை மேற்கொண்டு அதற்குரிய அறிக்கை தேவையான ஆலோசனைகளை பெற்றுக் கொள்ள உதவி உள்ளூராட்சி ஆணையாளரிற்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் கிடைக்கும் ஆலோசனைகளின் படி முன்நடவடிக்கை எடுக்கவிருப்பதாக அறிவிக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | 2016 மார்ச் 15 திகதிய DMS/D/0217 இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கடிதம் மூலம் பலங்கொட நகர சபை தீயணைப்பு அலகிற்காக 20 ஆளணிப் பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதும் அப்பதவிகளை நிரப்ப தேவையான செயற்பாடுகளை மேற்கொள்ளாததால் தீயணைப்பு அலகை முறையாக நிருவ முடியாதிருந்தது. | ஆளணியை நியமித்து தீயணைப்பு அலகை நிருவ நடவடிக்கை எடுக்க வேண்டும். | தீயணைப்பு அலகிற்கு ஆளணியை நியமிப்பது உள்ளூராட்சி திணைக்களத்தினால் ஆகும். இது தொடர்பாக 2019 நவம்பர் 04 திகதி நியமன அதிகாரியிற்கு அறிவித்து அனுப்பியுள்ளதால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் என எதிர்தபார்ப்பதாகவும் அறிவிக்கிறேன். |